

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.08.2024) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளருமான தயாநிதி மாறன் அவர்கள் சந்தித்து, 20 மாதங்களில் 180 போட்டிகள் நடத்தி சாதனை படைத்தது தொடர்பாக தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி நிகழ்ச்சிகளின் தொகுப்பு புத்தகத்தை வழங்கினார். உடன் தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணைச் செயலாளர்கள் எஸ்.ஆர். பார்த்திபன், ஆர். கோபால்ராம், எஸ். கார்த்திக், வே.நம்பி, வாசிம் ராஜா, செல்வி நிவேதா ஜெசிகா, வே.கௌதமன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.8.2024) சென்னை, அண்ணா நகரில் நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான என்.ஆர். இளங்கோ அவர்களின் ராகேஷ் சட்ட அமைப்பின் (RAKESH LAW FOUNDATION) அலுவலகத்திற்கு நேரில் சென்றார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், ஆ. ராசா, டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, மருத்துவர் நா. எழிலன், எஸ். சுதர்சனம், ஜோசப் சாமுவேல், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், மூத்த வழக்கறிஞர் ஆர். விடுதலை ஆகியோர் உள்ளனர்.

## பழனி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு

# ஆன்மீகத்தை அனைவருக்கும் உரியதாக்கி வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருக்கும்!

### காணொலிக் காட்சி வாயிலாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!





சென்னை, ஆக.27-

**“பழனி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு ஆன்மீகத்தை அனைவருக்கும் உரியதாக்கி வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருக்கும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி மூலம் உரையாற்றும் போது புகழாரம் சூட்டினார்.**

தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக பழநியில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்கள்.

இந்த மாநாட்டில் காணொலிக் காட்சி வாயிலாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் ஆற்றிய சிறப்புரை விவரம் வருமாறு:

தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக பழநியில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் இந்த மாநாட்டில் காணொலிக் காட்சி மூலமாக இந்த மாநாட்டில் பங்கேற்றுப் பேசுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

**அமைச்சர் சேகர்பாபுவிற்கு நன்றி!**

உலகம் எங்கிலும் இருந்து ஆன்மீகப் பெரியோர்கள், அடியார்கள், தமிழ் அறிஞர்கள், முருக பக்தர்கள் பங்கேற்கின்ற இந்த மாநாட்டிற்கு வாழ்த்துரை வழங்கும் வாய்ப்பைத் தந்த அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணன் சேகர் பாபு அவர்களை நம் முதலமைச்சர் அவர்கள் `செயல் பாபு’ என்றுதான் பாராட்டி அழைப்பார்கள். அது எவ்வளவு உண்மை என்பது இந்த மாநாட்டிற்கான ஏற்பாடுகளைப் பார்க்கும் பொழுது புரியும். செய்தித்தாள்களை, செய்தித் தொலைக்காட்சிகளைப் பார்த்தால், அண்ணன் அவர்கள் ஏதாவது ஒரு தெரு கோவிலில் ஆய்வுசெய்து கொண்டுதான் இருப்பார்.

நம் முதலமைச்சர் அவர்கள் கூறியது போல் கோவிலில்தான் அவர் குடியிருப்பார் என்று சொல்கிற அளவிற்கு அவரின் பணி சிறந்து விளங்குகிறது. இன்றைக்கு நம் திராவிட மாடல் அரசு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலில், அறநிலையத் துறை தன் பணிகளை அறத்துடன் எடுத்துச் செல்கிறது என்றால், அதற்கு காரணம் அண்ணன் சேகர் பாபு அவர்கள்தான்.

**நாத்திகத் தோட்டத்தில் ஆத்திக மலர்**

நாத்திகத் தோட்டத்தில் பூத்த ஆத்திக மலராக அண்ணன் சேகர் பாபு அவர்கள் செயல் பாபுவாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார். நம் திராவிட முன்னேற்றக் கழக அரசு, திடீரென இந்த மாநாட்டை நடத்துகிறது என்று இன்றைக்கு ஒரு சிலர் கேள்வி எழுப்புகிறார்கள். இந்த மாநாடு திடீரென்று நடத்தப்படுகின்ற மாநாடு அல்ல. கடந்த மூன்று ஆண்டுகளில் நம் முதலமைச்சர் தலைமையிலான நம் திராவிட மாடல் அரசு இந்து சமய அறநிலையத்துறை சார்பில், ஏராளமான சாதனைகளை எல்லாம் செய்து விட்டுத் தான் இந்த மாநாட்டை நடத்துகிறது.

**குறுக்கே நிற்காத அரசு**

திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரை யாருடைய நம்பிக்கைக்கும் குறுக்கே நிற்காத அரசு. எல்லோரின் உணர்வுக்கும் மதிப்பு கொடுக்கின்ற அரசு. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அறநிலையத்துறையின் பொற்காலம் என்றால் அது நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிதான்.

திராவிட இயக்கத்தின் தொடக்கப் புள்ளியாக இருந்த நீதி கட்சியின் ஆட்சியின்போதுதான் `இந்து சமய அறநிலையத்துறை பாதுகாப்புச் சட்டம்’ உருவாக்கப்பட்டு, வழிபாட்டு உரிமை உறுதி செய்யப்பட்டது. குன்றக்குடி அடிகளார் தந்த விபூதியை நெற்றி நிறைய பூசி கொண்டவர்தான் தந்தை பெரியார் அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் `ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ இன்று முழங்கினார்கள். ஓடாத திருவாரூர் தேரை ஓட வைத்தவர்தான் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இப்படி நம் தலைவர்கள் வழியில் முதலமைச்சர் அவர்கள் அறநிலையத்துறை சார்பாக, ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். திராவிட மாடல் அரசு அமைந்த இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 1,400 க்கும் அதிகமான கோவில்களுக்கு குடமுழுக்கு செய்து வைத்தவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள்.

**கோவில்கள் திருப்பணிகள்**

5 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான 6 ஆயிரம் ஏக்கர் கோவில் நிலங்கள் மீட்கப்பட்டு ள்ளன. 3 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பில் 8 ஆயிரத்து 500 கோவில்கள் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் பக்தர்களுக்கு கோவில்களில் உணவு வழங்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் நம் முதலமைச்சர் அவர்கள் காலை சிற்றுண்டித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இன்றைக்கு நாட்டிற்கு முன்மாதிரியாக பழனி முருகன் கோவில் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரியில் பயிலும் நான்காயிரம் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல் விரைவில், மதிய உணவும் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். ``திராவிடம் என்பது எல்லோருக்கும் எல்லாம் என்பது தான். திராவிடம் யாரையும் ஒதுக்காது. எல்லோரையும் இணைக்கும்” என்பதற்கு உதாரணம்தான் அனைத்து சாதியினரையும் மகளிரையும் அர்ச்சகர் ஆக்கியவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள்.

**அன்னைத் தமிழில் அர்ச்சனை**

அன்னைத் தமிழில் அர்ச்சனை என்ற திட்டம் அனைத்துக் கோவில்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மற்ற துறைகளைப் போலவே இந்து சமய அறநிலையத்துறையும் இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டி வருகிறது. இப்படி அடுக்கடுக்கான சாதனைகளை எல்லாம் செய்துவிட்டுத் தான் இந்த சிறப்புக்குரிய மாநாட்டினை நம் தமிழக அரசு நடத்துகிறது.

**தமிழர் பண்பாட்டு மாநாடு**

இந்த மாநாடு ஆன்மீக மாநாடாக மட்டுமல்லாமல், தமிழர் பண்பாட்டு மாநாடாகவும் நடைபெறுகிறது. கழக அரசின் இந்த முயற்சிகளை எல்லாம் ஆன்மீகப் பெரியவர்கள், பக்தர்கள் நீங்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராகவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் அமைச்சராகவும் இந்த மாநாட்டில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆன்மீகத்தை எல்லோருக்கும் உடைய தாக்கும் வகையில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு வரலாற்றில் என்றென்றைக்கும் நிலைத்திருக்க போவது உறுதி. இந்த மாநாட்டைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள இந்து சமய அறநிலையத்துறைக்கு எனது வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வாய்ப்புக்குநன்றிகூறிவிடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்**

அனைத்து உலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் அமைச்சர்கள் அர. சக்கரபாணி, பி.கே.சேகர்பாபு பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார், மயிலம் பேரூர் சிறுவை ஆதினம் மடாதிபதிகள், அரசின் முதன்மைச் செயலாளர் சந்தர மோகன் ஐ.ஏ.எஸ். துறையின் ஆணையர் பி.என்.ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ் மாவட்ட ஆட்சித் தலைவர் பூங்கொடி ஐ.ஏ.எஸ், அரசு அதிகாரிகள், அலுவலர்கள், ஆன்மீகச் சான்றோர்கள், அருளாளர்கள், சொற்பொழிவாளர்கள் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## செப்.9 ந்தேதி நடைபெறும் கவுன்சில் கூட்டத்தில்

# ஜி.எஸ்.டி. வரிச் சட்டத்தை எளிமைப் படுத்தும் முயற்சியை துவக்கிடுவீர்!

### ஒன்றிய நிதி அமைச்சரிடம் வேளாண் உணவு தொழில் வர்த்தக சங்கம் கோரிக்கை!

புதுடெல்லி, ஆக. 27 –

சட்டமே சிக்கலாக இருக்கும் பொழுது அதன்கீழ் கொடுக்கப்படும் நோட்டீஸ் மட்டும் எப்படி எளிமையாக இருக்க முடியும்? ஜி.எஸ்.டி வரிச் சட்டத்தை எளிமைப்படுத்தும் முயற்சியை செப்டம்பர் மாதம் 9ம் தேதி நடைபெறவிருக்கும் ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில் துவக்குவது மிகவும் அவசியம் என மத்திய நிதி அமைச்சரிடம் வேளாண் உணவு தொழில் வர்த்தக சங்கம் கோரிக்கை – விடுத்துள்ளது.

இது குறித்து சங்க தலைவர் எஸ்.ரத்தினவேலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

வரும் செப்டம்பர் மாதம் 9ம் தேதி நடைபெறவிருக்கும் ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில், தொழில் வணிகத் துறையின் சிரமங்களைப் போக்கும் வகையில் ஜி.எஸ்.டி வரிச் சட்டத்தை எளிமைப்படுத்தும் முயற்சியை, முன்னுரிமை கொடுத்து, துவக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் அவர்களிடம் வேளாண் உணவு தொழில் வர்த்தக சங்கம் சார்பாக வலியுறுத்துகிறோம். ஜி.எஸ்.டி சட்டம் அறிமுகப் படுத்தப்பட்ட 2017–ம் ஆண்டிலிருந்துகடந்த 7 ஆண்டுகளில் வெளியிட்டுள்ள நூற்றுக்கணக்கான அறிவிக்கைகள், சுற்றறிக்கைகள், கேள்வி–பதில்கள் மற்றும் சட்டவிதிகளில் செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் காரணமாக பெரும்பாலான வரி ஆலோசகர்களாலேயே புரிந்து கொள்ள முடியாத வகையில் ஜி.எஸ்.டி சட்ட விதிகள் மிகவும் சிக்கலாகி விட்டன. வணிக வரித்துறை அனுப்பும் வரி நோட்டீஸ்;களைஎளிமைப்படுத்த வேண்டும்;அதிகாரிகள் வரி செலுத்துவோருடன் ”நியாயமான மற்றும் நட்புறவுடன் செயல்பட வேண்டும்; என மத்திய நிதி அமைச்சர் அறிவித்திருப்பதற்கு எங்களது மனமார்;ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் சட்டமே சிக்கலாக இருக்கும்பொழுது அதன் கீழ் கொடுக்கப்படும் நோட்டீஸ் மட்டும் எப்படி எளிமையாக இருக்க முடியும்?

ஜி.எஸ்.டி சட்டத்தை எளிமையாக்குவதில் முதற்கட்டமாக எந்தப் பொருளுக்கு என்ன வரி என்பதில் இருக்கும் குழப்பம் தீர்க்கப்பட வேண்டும். உலக சுங்க அமைப்பால் ஒவ்வொரு பொருளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள இணக்க முறையிலான பெயர் குறியீட்டு எண் (HSN Code) அடிப்படையில் ஜி.எஸ்.டி வரிவீதம் விதி க்கப்பட்டுள்ளது. ஹெச்.எஸ்.என் கோடின் கீழ் அனைத்துப் பொருட்களும் 21 பகுதிகளாக பெரும் தலைப்புகளுடன் பிரிக்கப்பட் டுள்ளன.அப்பகுதிகளின் கீழ் 99 பிரிவுகளாகவும் அவற்றின் கீழ் 1244 தலைப்புகள் மற்றும் 5224 துணைத் தலைப்புகளாக பொருட்களுக்கு எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நம் நாட்டில் ஜி.எஸ்.டி சட்டத்தில் மேற்கண்ட தலைப்புகள் மற்றும் துணைத் தலைப்புகளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு வெவ்வேறான வரி வீதம் நிர்ண யிக்கப்ப ட்டுள்ளதால்,எந்த பொருளுக்கு என்ன வரிவீதம் என்பதில் பெரும் குழப்பம் நிலவுகிறது. பொருளுக்கான வரி என்ன என்பதற்கு முன்னதாகவே தீர்ப்பு வழங்கும்”அதிகாரம் பெற்ற ஆணையமே (AAR) ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரே பொருளுக்கு வெவ்வேறான வரி வீதம் என தீர்ப்பு வழங்குவதிலிருந்தே ஜி.எஸ்.டி வரிச் சட்டத்தில் வரி வீதம் குறித்து குழப்பம் நிலவுகிறது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இந்தக் குழப்பத்திற்;கு எங்கள் வர்த்தக சங்கம் தெரிவிக்கும் ஒரே தீர்வு, ஹெச்.எஸ்.என் கோடில் குறிப்பிட்டுள்ள 21 பகுதிகளின் அடிப்படையில் வரி விதிப்பதே. ஒரு பகுதியில் உள்ள பொருட்கள் அனைத்திற்கும் ஒரே வரி என்று நிர்ணயிப்பதே ஜி.எஸ்.டிவரிச் சட்டத்தை எளிமைப்படுத்தும். வெளிநாடுகள் பலவற்றில் எல்லா பொருட்களுக்கும் ஒரே ஜி.எஸ்.டிவரி என்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜி.எஸ்.டி அதிகாரிகளுடன் எப்போதும் தொடர்பில் இருங்கள் அதன் மூலம் உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்று தொழில் வணிகத் துறைக்கு சமீபத்தில் அறிவுரை கூறியுள்ள நிதியமைச்சருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம். ஆனால் ஜி.எஸ்.டி ஓர் அனைந்திந்திய வரிச்சட்டம் என்பதால் முடிவெடுக்கும் அதிகாரம் படைத்த அதிகாரிகள் புதுடில்லியில் தான் இருக்கி;றார்கள். அவர்களை தொழில் வணிகத் துறையினர் நேரில் சந்தித்து சிரமங்களையும், ஆலோசனைகளையும் எடுத்துக்கூறி விவாத மேஜையிலேயே தீர்வு கிடைக்க தொழில், வணிகத்துறைக்கு எந்த வாய்ப்பும் இல்லை. மாநில நிதி அமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஜி.எஸ்.டி கவுன்சில் அமைக்கப்பட்டிருப்பது போல் ”வர்த்தக ஜி.எஸ்.டி கவுன்சில் ஒன்றும் அனைத்து மாநில தொழில் வணிகப் பிரதிநிதிகளுக்கும் வாய்ப்புக் கொடுத்து ஏற்படுத்தி ஜி.;எஸ்.டி கவுன்சில் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் இக் கவுன்சில் கூட்டம் நடைபெற வேண்டும். இதன் மூலம் சட்ட அமலாக்கம் மிகவும் எளிமையாகும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சிறுபான்மையினருக்கு எதிரான

# வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவை ஒன்றிய அரசு ரத்து செய்ய வேண்டும்!

### சுபேர்கான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, ஆக. 27 -*

*சிறுபான்மையினருக்கு எதிராக ஒன்றிய அரசு புதிதாக கொண்டு வந்துள்ள வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவை திரும்ப பெற வேண்டும் என தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.*

*தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாவட்ட , மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.*

*சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் சுபேர்கான் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாநில துணை செயலாளர்கள் மற்றும் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.*

*இந்தக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.*

*அதில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவை அகிலம் வியக்க கொண்டாடி சரித்திரம் படைத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றி தெரிவிக்கிறது.*

*தொழில் துறையை மட்டுமே நம்பியுள்ள சிறுபான்மையின மக்களின் வாழ்வாதாரம் இன்று குறிப்பிட தகுந்த வளர்ச்சி பாதையில் சென்று கொண்டிருப்பதாகவும் புது தொழில்கள் மூலம் தமிழக சிறுபான்மையின மக்களின் பொருளாதார ஏற்றத்திற்கு வழி வகுத்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றிகளை தெரிவிப்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*தி.மு.கழகத்தின் 75 ஆம் ஆண்டு பவள விழா நிறைவினை கொண்டாடும் வகையில் கழகத்தின் சார்பில் நடைபெற உள்ள முப்பெரும் விழாவில் சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு நிர்வாகிகள் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*ஒன்றிய அரசு கொண்டு வரும் சிறுபான்மையினர் விரோத வக்ஃபு சட்ட திருத்த மசோதாவை கடுமையாக எதிர்ப்பதுடன் கூட்டாட்சி தத்துவத்தை சிதைக்கும் சிறுபான்மை யினருக்கு எதிரான இந்த சட்ட திருத்தத்தை ஒன்றிய அரசு முழுவதுமாக ரத்து செய்ய வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

# கருநாடக மாநில தி.மு.க முப்பெரும் விழா ஆலோசனைக் கூட்டம்!

### அமைப்பாளர் ந.இராமசாமி அறிவிப்பு!



கருநாடக மாநில தி.மு.க சார்பில் இவ்வாண்டு கழக முப்பெரும் விழா நிகழ்ச்சிக்கான ஆலோசனைக்கூட்டம் செப்டம்பர் 1ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கருநாடக மாநில தி.மு.க கலைஞரக வளாகம் தளபதி மு.க.ஸ்டாலின் மணிவிழா அரங்கத்தில் அவைத் தலைவர் மொ. பெரியசாமி அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

குழுவில் மாநில தி.மு.க நிர்வாகிகள், தலைமைப் பொதுக் குழு உறுப்பினர்கள், மாநில தி.மு.க முன்னாள் நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**ந.இராமசாமி**

அமைப்பாளர் – கருநாடக மாநில தி.மு.க.